DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| STC.NO.109/2021 | Crime No.: | Police Station : |
| PW : 1 | C.M.P. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | கே.என்.ஸ்ரீனிவாசன் | Caste | |
| Father's Name | நல்லசாமிகவுண்டர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 43 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 01.09.2021 |

**முதல் விசாரணை-**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது முதல் விசாரணையில் எழுத்துப்பூர்வமான சத்தியபிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். பின்வரும் ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். **ம.சா.ஆ.1** – 10.12.2020 ம் தேதிய கரூர் வைஸ்யா வங்கி, அட்பர் கிளை, ஈரோடு ரூ.2,45,000/-த்திற்கான காசோலை எண்.000162 அசல், **ம.சா.ஆ.2** – 23.12.2020 ம் தேதிய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளை வழங்கிய ரிட்டன் மெமோவின் அசல், **ம.சா.ஆ.3** – 28.12.2020 ம் தேதிய புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், **ம.சா.ஆ.4** – 31.12.2020 ம் தேதிய எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை தனது அலுவலக முகவரியில் பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல், **ம.சா.ஆ.5** -07.01.2021 ம் தேதிய எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பிய அறிவிப்பினை பெற மறுத்ததால், திருப்பப்பப்பட்ட அஞ்சல் உறையின் அசல், **ம.சா.ஆ.6** – 12.01.2021 ம் தேதிய எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை-**

நான் இவ்வழக்கினை எதிரி மீது காசோலை மோசடிக்காக தாக்கல் செய்துள்ளேன். நான் இவ்வழக்கில் ஆவணங்களான எதிரி கொடுத்த காசோலை, ரிட்டன் மெமோ ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இரண்டு ஆவணங்களை தவிர, இவ்வழக்கினை நிரூபிப்பதற்கு வேறு ஆவணங்கள் இல்லை, சாட்சி மீண்டும் உள்ளது என்று கூறுகிறார். மேற்படி இரண்டு ஆவணங்களை தவிர, நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு ஆகியவை எனது கை வசம் உள்ளது. அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயார். எனக்கு தமிழ் எழுத, படிக்க நன்றாக தெரியும். ஆங்கிலம் எழுத நன்றாக தெரியும், படிக்க ஓரளவு தெரியும். நான் 11 ம் வகுப்பு படித்துள்ளேன். எதிரி அனுப்பிய பதிலறிவிப்பில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். எதிரி அனுப்பிய பதிலறிவிப்பில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மை என்ற காரணத்தினால்தான், அதனை மறுத்து, பதிலறிவிப்பை ஏதும்

அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல, அதில் உள்ள சங்கதிகள் உண்மையல்ல. ஆனால், பதிலறிவிப்பு அனுப்பவில்லை. நான் பழைய காரை வாங்கி, புதுப்பித்து, விற்பனை செய்யும் கார் கன்சல்டன்சி வியாபாரம் செய்து வருகிறேன். நான் 10,15 வருடங்களாக இந்த வியாபாரத்தை செய்து வருகிறேன். மேற்படி வியாபாரத்திற்கு உண்டான கணக்கு, வழக்குகளை நான் பராமரித்து வருகிறேன். நான் கடந்த 9 வருடங்களாக வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் தனிபட்ட முறையில், எனது பெயரில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேன். மேற்படி வியாபாரத்திற்கு உண்டான பண பரிவர்த்தனைகளை காசோலை மூலமாகவும் செய்வேன், ரொக்கமாகவும் செய்வேன். கார் கன்சல்டன்சி தொழிலை தவிர, வட்டி தொழில் ஏதும் நான் செய்யவில்லை. எனக்கு வட்டிக்கு கடன் கொடுக்கும் பழக்கம் இல்லை. எனது வருமானத்தினை நிரூபிப்பதற்கு எனது வருமான வரி கணக்கினை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு கடன் கொடுப்பதற்கு போதுமான வசதி உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு எந்த ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேன். எனது வருமான வரி கணக்கினை தாக்கல் செய்தாலே, அதில் நான் செய்த வியாபாரத்தின் வரவு செலவுகள், கடன் கொடுத்த விவரங்கள் தெரியும் என்று சொன்னால் சரிதான். 2019 – 2020 வருடத்திற்கு உண்டான வருமான வரி கணக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். அதனை, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன். எதிரி குடியிருக்கும் வீடு சொந்த வீடு இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரி மாத சம்பளத்திற்கு வேலைக்கு சென்று வருகிறார். எதிரி மில் வேலைக்கு சென்று வந்தார், எந்த மில் என்று எனக்கு தெரியாது, தற்போது வீட்டிலேயே மாவு மில் வைத்துள்ளார். எதிரியின் கணவர் ரஞ்சித்குமார் என்னிடம் உதவியாளராக இருந்தார், ஓட்டுநராகவும் அவ்வபோது வேலை செய்வார். அவர் கால் ஊனமுற்ற மாற்றுதிறனாளி என்று சொன்னால் சரிதான். 2019ம் ஆண்டு வரை அவருக்கு ஓட்டுநர் உரிமம் அமலில் இருந்ததால், ஓட்டுநராக வேலை செய்தார் என்று சொன்னால் சரிதான். அவர் 2019ம் ஆண்டு கடைசியிலேயே வேலையிலிருந்து நின்று விட்டார். ம.சா.ஆ.1 காசோலையை அதற்கு பிறகுதான், வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். எதிரியின் கணவர் ரஞ்சித்குமார் வெகு தூரத்தில் உள்ள காரை எடுத்து கொண்டு வந்து, ரிப்பேர் செய்து, கொண்டு வந்து கொடுக்கும் வேலை செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல, அவர் என்னுடன்தான் மெக்கானிக் ஷாப் வருவார், பணபரிவர்த்தனை எதுவும் அவர் மூலமாக நான் செய்யவில்லை. எதிரியின் கணவர் ரஞ்சித்குமார் எனது உதவியாளர் என்கிற முறையில் பழைய காரினை எடுத்து கொண்டு வந்து, அதனை ரிப்பேர் செய்து, அதற்கு உண்டான தொகையை என்னிடம் பெற்று, பின் அந்த காரினை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து, அந்த தொகையை கொண்டு வந்து என்னிடம் கொடுப்பார் எனவும், வழக்கிற்காக பணபரிவர்த்தனை எதுவும் அவர் மூலமாக செய்ததில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கணவர் ரஞ்சித்குமாருக்கு மாத சம்பளம் ரூ.10,000/- ஆகும், அதனை ரொக்கமாகதான் அவர் கையில் கொடுப்பேன், அதனை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன். எதிரியின் கணவர் ரஞ்சித்குமாரின் வங்கி கணக்கிற்கு அவசரத்திற்காக ரூ.500/-, ரூ.1000/-

ஆகியவற்றை செலுத்தியுள்ளேன், பெரிய தொகை எதையும் செலுத்தியதில்லை. நான் ரூ.500/-, ரூ.1000/- ஆகியவற்றையே அவருடைய அக்கௌண்ட்டில் செலுத்தியுள்ளதால், பெரிய தொகை எதனையும் ரொக்கமாக அவர் கையில் கொடுக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளையை தவிர, ஏக்ஸிஸ் வங்கி, மேட்டுநாசுவம்பாளையம் கிளையில் எண்.913010043314403 மற்றும் மற்றொரு எண்.914010048914115 ஆகிய இரண்டு அக்கௌண்டுகளும், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, ஈரோடு கிளையில் அக்கௌண்ட் எண்.660701549717 உள்ளது. பொதுவாக, ரூ.25,000/-க்கு மேல் பணபரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால் காசோலை மூலமாகவோ, வரைவோலை மூலமாகவோதான், செய்யவேண்டும் என்று எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் எதிரி எனக்கு எவ்வாறு அறிமுகமானார் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் எந்த தேதியில் எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்றோ, எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் எங்கு வைத்து இந்த காசோலை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் யார் முன்னிலையில் இந்த காசோலை கொடுக்கப்பட்டது என்றும், யார் அதனை நிரப்பினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான், தேவைப்பட்டால் சொல்ல தயாராக உள்ளேன். எதிரிக்கு கடன் கொடுத்ததற்காக ம.சா.ஆ.1 யை தவிர, வேறு ஆவணம் ஏதேனும் வாங்கி உள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில், நான் எதிரிக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டிக்கு கடன் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள விவரம் சரிதான், ஆனால் நான் வட்டி கேட்கவில்லை, எதிரி தானாக வட்டி கொடுப்பதாக சொன்னதால் குறிப்பிட்டுள்ளேன். இந்த தகவலை எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி சுமார் 8 மாதத்திலிருந்து 15 மாதத்திற்குள் கடனை திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். எதிரி மேற்படி காலத்திற்கு வட்டி தொகை ஏதேனும் செலுத்தவில்லை, கடன் வாங்கியபோது மாதாமாதம் வட்டி கொடுப்பதாக நாங்கள் பேசவில்லை, கடன் திருப்பி கொடுக்கும்போது மொத்தமாக வட்டி தொகை கொடுப்பதாக எதிரி கூறினார். மேற்படி அசல் தொகை மற்றும் வட்டி தொகை ஆகியவற்றிற்காக கொடுக்கப்பட்டதுதான், இவ்வழக்கு காசோலை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு காசோலையை கடன் வாங்கிய அன்றே எதிரி கொடுத்தார். எதிரிக்கு நான் கொடுத்த கடன் தொகையை ரொக்கமாக கொடுத்தேனா, காசோலையாக கொடுத்தேனா அல்லது வரைவோலை மூலமாக கொடுத்தேனா என்று எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்த கடன் தொகையை கைமாற்று கடனாக கொடுத்தேனா அல்லது வட்டிக்கு

கொடுத்தேனா என்று எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 2018ம் வருடத்திலிருந்து இவ்வழக்கு காசோலை எனது கைவசத்தில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. எதிரி ம.சா.ஆ.1 காசோலையில் ஒரே ஒரு கையொப்பம்தான் செய்தார், ரீபில் பேனா மையினால் கையொப்பம் செய்தார். ம.சா.ஆ.1 காசோலையில் கையொப்பத்தில் கண்டுள்ள மையும், தொகையில் குறிப்பிட்டுள்ள மையும் வெவ்வேறானது என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு ஆங்கிலம் சரியாக வராது என்று சொன்ன காரணத்தினால், என்னை பூர்த்தி செய்து கொடுக்க சொன்னதால், நான் அதில் உள்ள தேதி, பெயர், தொகையை எண்ணிலும், எழுத்திலும் எழுதினேன், கையொப்பம் மட்டும் எதிரி செய்தார். இந்த விவரத்தினை எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியான 20.05.19 லேயே காசோலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் எனவும், இவ்வழக்கு காசோலையில் உள்ள தொகை மற்றும் கையொப்பத்தை நானாக பூர்த்தி செய்து, எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. காசோலையை பூர்த்தி செய்த விவரம் எதுவும் எதிரிக்கு தெரியாது எனவும், எதிரிக்கு தெரிந்ததுபோல காட்டி, இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் **"அன்றைய தினமே எதிரி எனக்கு பின்தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கி, அட்பர் கிளை, ஈரோடு, காசோலை எண்.000162 யை 10.12.2020 ம் தேதியிட்டு ரூ.2,45,000/-க்கான காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தார் "** என்று சொன்னால் சரிதான். நான் வழக்கில் சொல்லிஉள்ள சங்கதிக்கும், தற்போது நான் சொல்லும் சங்கதிக்கும் முன்னுக்குபின் முரண் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.